# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,922 — 1970 සැප්තැම්බර් 4 වැනි සිකුරාද — 1970.9.4

14,922 ம் இலக்கம்—1970 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 4 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV—உள்ளூராட்சி

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 265 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 268 | வரவு செலவுத் திட்டங்கள் .. .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | — | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | 271 | விதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் .. | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் .. .. .. | 273 | நானாவித அறிவித்தல்கள் .. .. . | — |


## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

*கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்*

*(257 ஆம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 5 (2) ம் பிரிவால் தமக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் ஆக்கப்பட்ட கட்டளை.*

எப். ஆர். டயஸ் பண்டாரநாயக்க,
*அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி,*
*உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.*

*கொழும்பு 7, ஆகஸ்டு 17, 1970.*

*கட்டளை*

*1969 சனவரி 9 ந் திகதிய 14,834/7 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட வடமத்தியமாகாணம் அனுராதபுர மாவட்டத்து உதியங்குளம் கோறளைக் காரியாதிகாரியின் பிரிவிலுள்ள உதியங்குளம் கோறளைக் கிராமப் பிரதேசத்தை கலென்பிந்துனுவெவ, கஹட்டகஸ்டிகிலிய ஆகிய இரண்டு புதிய கிராமப் பிரதேசங்களாகப் பிரிவினை செய்வதை நடைமுறைக்குக் கொண்டுவருவதற்கு அவசியமான கருமங்களுக்கு இதனோடுள்ள அட்டவணையில் விவரிக்கப்பட்ட விதத்திலான ஏற்பாடு இத்தால் செய்யப்படுகின்றது.*

*அட்டவணை*

*1. புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றினதும் கிராமச் சபை, அந்தப் புதிய கிராமப் பிரதேசம் பற்றிய கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் சகல நோக்கங்களுக்கும், பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையின் பின்னுரித்தாளியாக இருக்கும்.*

*2. 1969 யூன் 30 ல் நடைமுறையிலிருக்கும் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு துணைவிதிகள் யாவும் இத்துணைவிதிகள் அப்புதிய கிராமப் பிரதேசத்துடன் சம்பந்தப்பட்டவரையில் புதிய கிராமப் பிரதேசம் ஒவ்வொன்றிலும் தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டுவதுடன் அவை அப்புதிய கிராமப் பிரதேசத்து கிராமச் சபையால் ஆக்கப்பட்டனவாகக் கருதப்படவும் வேண்டும்.*

*3. 1969 யூன் 30 ல் பழைய கிராமப் பிரதேசத்து கிராமச் சபையில் சமுதாய நிதியின் வரவின் உள்ள தொகை 1969 யூலை 1 இன் (மின்சாரம் கணக்கு நீங்கலாக) அரைப்பங்குகளாகப் பிரிக்கப்பட்டு கலென்பிந்துனுவெவ கஹட்டகஸ்டிகிலிய ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களின் கிராமச் சபைகளின் சமுதாய நிதிகளில் வரவுவைக்கப்படல்வேண்டும்.*

*4. 1969 யூன் 30 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்து பின்வரும் அசைவுள்ள சொத்துக்கள் 1969 யூலை 1 ல்*

### வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1969 ம் ஆண்டு திசெம்பர் மீ 14 ந் உ*

கலென்பிந்துனுவெவக் கிராமப் பிரதேசத்து சபைக்கு உரித்தாக் கப்பட்டதாகக் கருதப்படல்வேண்டுவதுடன் பழைய கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த அல்லது அதன் ஆதிக்கததின் கீழிருந்த எஞ்சியுள்ள அசைவுள்ள சொத்து எதுவும் கஹட்டகஸ் டிகிலியக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்படவும் வேண்டும.

தட்டச்சப்பொறி சிறியது (ஒலிம்பியா) 1
இணைப்படிப்பொறி 1
கோப்பு வெட்டி 1
முத்திரைப்படி 1
பௌத்த கொடி 1
100 அடி நாடா 1
கோறளை மாதிரிப்படம் 1
கண்ணடிப்பாரக்கட்டி 1
ஜின்தட்டு 1
மேசைவிளக்கு 1
வாயிற்படிப்பாய்கள் 3
நீரஎந்திரமும் பம்பியும் 1
சிறிய கிண்ணங்கள் 4
தண்ணீர்க்கோப்பை 1
தினமுத்திரை 1
முத்திரைத்தட்டு 1
மலகூடவண்டி 1
மண்வெட்டி 1
எழுதுமேசை 1
சிறிய மேசை 1
மாநாட்டு மேசைகள் 3
அலுமாரிகள் 2
கைபிடிக்கதிரைகள் 3
சாதாரண கதிரைகள் 11
தட்டுகள் 3
வாங்கு 1
கடித ருக்கை 1
அறிவித்தல் பலகை 1
பெரிய மேசை 1

5. 1969 யூன் 30 ல் பழைய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த அல்லது அதன் ஆதிக்கத்தின் கீழிருந்த காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து ஒவ்வொன்றும் 1969 யூலை 1 இன் எப்புதிய கிராமப் பிரதேசத் தினுள் அக்காணி, கட்டடம் அல்லது வேறு அசைவற்ற சொத்து அமைந்திருக்கின்றதோ அப்புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருப்பதாகக் கருதப்படல் வேண்டும்.

6. பழைய கிராமப் பிரதேசத்து கிராமச் சபையின் உரிமைகள், கடன்கள் பொறுப்புகள், கடப்பாடுகள் அனைத்தும், அவை புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபை ஒவ்வொன்றுடனும் சம்பந் தப்பட்ட வரையில் அப்புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்பட்டிருப்பனவாகக் கருதப்படல்வேண்டும்.

7. பழைய கிராமச் சபையினால் வைத்திருக்கப்பட்ட கோப்பு கள், பதிவுகள், பத்திரங்கள் அனைத்தும், அவைகள் ஒவ்வொரு புதிய கிராமப் பிரதேசத்துடனும் சம்பந்தப்பட்ட வரையில் 1969 யூலை 1 லிருந்து அப்புதிய கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபைக்கு மாற்றப்பட்டிருப்பவையாகக் கருதப்படல் வேண்டும்.

8. பழைய கிராமச் சபையின் சேவையாற்றிய ஊழியர்களுக்கு இளைப்பாற்றிச் சம்பளம் வழங்குவதன் பொருட்டுச் செலுத்தப் பட்ட உதவு தொகைகள் சம்பந்தமான பழைய கிராமச் சபையின் பொறுப்பு கலென்பிந்துனுவெவ, கஹட்டகஸ்டிகிலிய ஆகிய புதிய கிராமப் பிரதேசங்களினது கிராமச் சபைகளிடையே 1 : 1 ஆகிய விகிதாசாரத்தில் பிரிக்கப்படல்வேண்டும்.

9. இந்த அட்டவணையில்—

"புதிய கிராமப் பிரதேசம்" என்பது வேறு விதத்தில் குறிப் பிடப்பட்டாலன்றி 1969 சனவரி 9 ன் 14,835/7 ஆம் இலக்க அதி விசேட கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைகளில் விபரிக்கப்பட் டுள்ள கலென்பிந்துனுவெவ, அல்லது கஹட்டகஸ்டிகிலிய கிராமப் பிரதேசம், சந்தர்ப்பத்திற்கேற்ப எனப்பொருள்படும்.

"பழைய கிராமப் பிரதேசம்" என்பது புதிய கிராமப் பிரதே சங்களாக வருவதற்கு முன்பிருந்த உதியங்குளம் கோறளைக் கிரா மப் பிரதேசமெனப் பொருள்படும்.

9-273—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

## நகரங்களினதும் கிராமங்களினதும் பெயர் மாற்றுதல்

கீழ்க்காணப்படும் முதலாவது அட்டவணையிற் கொடுக்கப்பட்டுள்ள கிராமத்தின் பெயர் இரண்டாவது அட்டவணையின்படி மாற்றப்பட்டிருக்கின்றது என்பதை இத்தால் அறியத்தரப்படுகின்றது. மேலும், "தோம்பே வடக்கு" என 24.7.70 ஆம் திகதிய 14,916 ம் இலக்கம் கொண்ட கசெற்றில் பிரசுரிக்கப்பட்டது ரத்துச்செய்யப்படுகின்றது.

பொது நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சு,
கொழும்பு 7,
1970 ம் ஆடு ஆகஸ்ட் மீ 25 ந உ.

பீலிக்ஸ் ஆர். டி. பண்டாரநாயக்க,
பொது நிர்வாக,
உள்ளூராட்சி, உள்நாட்டு விவகார அமைச்சர்.

| மாவட்டம் | முதலாவது அட்டவணை | இரண்டாவது அட்டவணை |
|---|---|---|
| கொழும்பு | .. ஹுனுகந்தன | .. தோம்பே பஹால |

9-263—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922.

---

## பசறைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

### 1970 க்கான விசேட தண்ணீர் வரி

(256 ம் அதிகாரமாம்) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) ஆம் பிரிவின்படியும், அப்பிரிவினுல் அன்னுருக்கு அளிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள் நாட்டலுவல்கள் அமைச்சர் வழங்கிய அனுமதியுடனும், துணைவிதிகளினுல விதிக்கப்படக்கூடியனவாய வரம்புகளுக்கும் விதிவிலக்குகளுக்கும் அமை வாகவும் தண்ணீர் சேவையினுல் பயனடையும் பிரதேசத்தினுள் அமைந்துள்ளனவும் இதற்குள்ள அட்டவணையிற் காட்டப்பட்டுள்ளனவு மான நிலையான ஆதனங்கள் சகலவற்றினதும் வருடாந்தப் பெறுமதி, மின் நூற்றுக்கு இரண்டு வீதமானதும் முறையே செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில இரண்டு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட தண்ணீர் வரியை 1970 ஆம் ஆண்டுக்கு பசறைப் பட்டின சபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

பி. சிரிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம்,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆடு ஆகஸ்ட் மீ 25 ந உ.

### அட்டவணை

பின்வரும் மதிப்பீட்டிலக்கங்களைக் கொண்ட மனைத்தலங்கள் அமைந் துள்ள பிரதேசங்கள் :—

#### 1ம் வட்டாரம்

பதுளை - மட்டக்களப்பு வீதி :—115, 117, 119, 121, 123, 125, 127, 129, 133, 135, 141, 149, 149/1, 157, 157/2, 161, 163, 165, 169, 169/1, 171/1, 171/4, 171/5, 177, 177/1, 177/2, 179, 183, 183/4, 183/5, 183/7, 183/8, 183/9, 183/11, 183/12, 183/14, 183/16, 195, 201, 203, 209, 211, 217, 217/1.

கன்னிளப் வீதி :—5, 9, 17/1, 17/2, 17/3, 19, 19/1, 23, 23/1, 23/2, 23/3, 23/4, 23/6, 23/7, 23/8, 23/9, 23/11, 23/12, 23/13, 23/14, 23/16, 23/20, 29, 29/1, 33, 36, 36A.

சங்கபோமாவத்தை:—70/1, 72, 80, 84

#### 2ம் வட்டாரம்

பதுளை-மட்டக்களப்பு வீதி : —126/1, 132, 138, 138/2, 138/3, 138/4, 138/5, 138/6, 138/7, 144, 148, 160, 180, 182, 184, 186, 190, 192, 194, 196, 198, 202, 204, 204/1, 208, 108/2. 208/3, 229, 229/1, 229/2, 229/3,. 229/4, 229/5. 229/6, 229/7, 229/8, 229/9, 229/10, 229/11, 229/12, 229/13, 229/14, 231.

கன்னிளப் வீதி:—6, 10, 12/4, 12/5, 12/6, 12/7, 12/8, 12/9, 12/10

சங்கபோ மாவத்தை :—42/1, 44, 44/2, 44/1, 44/4, 44/5, 44/6, 44/7, 44/8, 70, 47, 53, 53/1, 55, 55A, 55/1, 59, 61, 85.

ஆசுப்பத்திரி வீதி :—4/1, 4/2

3ம் வட்டாரம்

பதுளை - மட்டக்களப்பு வீதி : — 235, 237, 241, 243, 251, 26/1, 261/2, 265, 275, 277, 277/1, 279, 285, 287, 289, 293, 295, 295/1, 301, 303, 305, 307, 313, 317, 321, 325, 327, 329, 331, 333, 335, 337, 339, 343

சங்கபோ மாவத்தை :—14, 18, 22, 24, 24/1, 26, 26/2, 26/3, 26/4, 30, 38, 15, 19, 21, 23, 25, 27, 29, 31.

4ம் வட்டாரம்

பதுளை - மட்டக்களப்பு வீதி :—264, 266, 270, 270A, 272, 274, 276, 278, 280, 282, 284, 288, 288A, 290, 292, 296, 294, 298, 304, 306, 308, 310, 314, 316, 318, 320, 322, 324, 328, 330, 330/1, 332, 336, 338, 340, 342, 344.

டமெரிய வீதி : — 8, 10, 12, 16, 18, 7, 7A, 9, 11, 11/2, 11/3, 11/4, 11/5, 11/6, 15, 17, 19, 21.

5ம் வட்டாரம்

பதுளை - மட்டக்களப்பு வீதி :—350, 352, 354, 356, 358, 360, 364, 366, 368, 372, 374, 376, 378, 380, 386, 388, 390, 392, 394, 394A, 396, 398, 400, 402 416.

டமெரிய வீதி :—11/10, 11/14. 11/15, 11/16, 11/17, 11/20.

பராக்கிரம மாவத்தை :—5, 7, 9, 11, 15, 19, 19/2, 19/3, 19/4, 19/5, 19/6, 19/7, 19/8, 19/9, 33, 37, 37/1, 43, 47, 51, 53, 55, 2, 2/3, 2/4, 2/5, 2/6, 2/7, 2/8, 2/9, 2/10, 4, 10, 20, 24, 24/3, 24/4, 24/5, 24/6, 24/7, 24/8, 24/9, 24/10, 24/13, 24/14, 24/16, 24/17, 24/18, 24/19, 24/20, 24/21, 24/22, 24/24, 24/25, 24/26, 24/27, 24/28, 24/29, 24/30, 24/31, 24/32, 24/34, 26, 28, 30, 32, 34, 54, 54/1, 60, 60/1, 60/2, 60/3, 64, 66, 68, 68/1, 68/2, 68/3, 68/4, 72, 72/1.

6ம் வட்டாரம்

பதுளை-மட்டக்களப்பு வீதி :—422, 424, 426, 428, 430, 434, 436, 438, 440, 446, 446/1, 450, 452, 454, 456, 460, 460/1, 464, 466, 468, 472, 474, 476, 478, 484, 484/1, 486, 486/4, 486/7, 486/8, 486/9, 486/11, 486/13, 486/14, 492, 498, 504, 506, 508, 510, 512, 514, 516, 518, 520, 522, 524, 524/1, 534, 540.

பராக்கிரம மாவத்தை :—31/5, 31/6, 31/7, 31/8, 31/9, 31/12, 31/15, 31/16, 31/17, 37/1, 37/2, 37/3, 37/4, 37/5, 37/7, 37/9, 37/10, 37/11, 37/12, 47/1, 47/2, 47/3, 47/4, 47/5, 47/6, 47/9, 47/10, 61, 67, 69, 69/1, 69/2, 69/4, 69/6, 69/7, 69/8, 71, 73, 77, 77/2, 79/5, 81, 81/1, 85, 87, 87/1, 93.

வறட்டொல வீதி :—7, 7/2, 2, 4, 6, 10, 18, 20.

7ம் வட்டாரம்

பதுளை-மட்டக்களப்பு வீதி :—349, 349/1, 359, 361, 363, 365, 367, 383, 383/1, 385, 387, 391, 391A, 395, 397, 399, 405, 409, 411, 413, 415, 417, 419, 423, 425, 425/1, 425/2, 425/4, 437, 437/1, 437/2, 437/3, 439, 441, 443, 445, 447, 449, 451, 457, 459, 461, 467, 475, 479, 481, 485, 487, 489, 491, 493, 495, 497, 499, 501, 503, 505, 507, 509, 515.

மடுல்சிம்ம வீதி :—7, 7/1, 7/2, 7/3, 7/6, 7/7, 7/8, 7/9, 7/10, 7/11, 7/12, 7/13, 7/22, 2, 2/1, 4, 6, 10, 10/1, 16, 18, 20 22.

பள்ளிக்கூட ஒழுங்கை :—9, 9/3, 17, 10, 12, 12/1, 12/2, 12/4.

9-249—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

*வெலிசறைப் பட்டின சபை*

*பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்*

*1970 க்கான ஆதன வரி*

*(156 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 159 (1) ஆம் பிரிவின் படியும், அப்பிரிவினால் தமக்களிக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வழங்கிய அங்கீகாரத்துடனும் சபையினால் விதிக்கப்படக்கூடியதாய வரையறைகளுக்கும்/மட்டுப்பாடுகளுக்கும், நிபந்தனைகளுக்கும் அமைவாகவும் வெலிசறைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள நெற்காணிகள் தவிரவுள்ள நிலையான ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு ஆறு வீதமானதும் முறையே, செத்தெம்பர் 30, திசம்பர் 31 ஆகிய திகதிகளில் இரண்டு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு ஆதன வரியை 1970 ஆம் ஆண்டுக்கு வெலிசறைப் பட்டின சபை விதித்திருக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.*

*பி. சிரிவர்த்தன,*
*நிரந்தரச் செயலாளர்,*
*அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி*
*உள்நாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு, 25.8.1970.*

*9-248—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922*

---

*கிராம சபைகள் கட்டளைச் சட்டம்*

*17 ஆம் பிரிவின்படியான அறிவித்தல்*

*1961 ஆம் ஆண்டின் 60 ஆம் இலக்கக் கிராம சபைகள் (திருத்தச்) சட்டத்தால் திருத்தப்பட்ட கிராம சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (1) ஆம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு, மட்டக்களப்புப் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பேட்றம் ஆனல்ட் ஜெயராஜா காசிநாதர், ஆகிய நான், கோறளை தெற்குக் கிராம சபையின் முதலாவது கூட்டத்தை 1970 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் 12 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கோறளை தெற்குக் கிராம சபை அலுவலகத்தில் இத்தால் கூட்டுகிறேன்.*

*பீ. ஏ. ஜே. காசிநாதர்,*
*மட்டக்களப்புப் பிரதேச உள்ளூராட்சி*
*உதவி ஆணையாளர்.*

*மட்டக்களப்புப் பிரதேச உள்ளூராட்சி*
*உதவி ஆணையாளர் அலுவலகம்.*
*மட்டக்களப்பு, 1970 செப்தம்பர் மாதம் 1 ஆம் தேதி.*

*9-253—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922*

---

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**17 (1) ம் பிரிவின்படியான அறிவித்தல்**

1961 ன் 60 ம் இலக்க அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 17 (1) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக்கொண்டு மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தேவரத்தினம் டான்போத் ஆகிய நான் இதன் அட்டவணை பத்தி I ல் குறிக்கப்பட்டுள்ள கிராமச் சபையின் முதலாவது கூட்டத்தை அதே அட்டவணையின் II ம் பத்தியின் கீழ் குறிக்கப்பட்டுள்ள திகதியில் அதே அட்டவணையின் III ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள நேரத்தில் அதே அட்டவணையின் IV ம் பத்தியில் குறிக்கப்பட்டுள்ள இடத்தில் இத்தால் கூட்டுகிறேன்.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
மன்னார்,
1970 ம் ஆண்டு செப்டம்பர் மீ 1 ந் வ.

தேவரத்தினம் டான்போத்,
உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
மன்னார்.

அட்டவணை

| பத்தி I கிராமச் சபையின் பெயர் | பத்தி II திகதி | பத்தி III நேரம் மு. ப. | பத்தி IV இடம் |
|---|---|---|---|
| பெருங்களிப்பற்று | .. 11.9.70 | .. 10.00 .. | பெருங்களிப்பற்று கிராமச் சபை அலுவலகம், விடத்தல் தீவு |

9-275—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922.

**கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்**

**13 ம் பிரிவின்படியான அறிவித்தல்**

*1961 ம் ஆண்டின் 60 ம் இலக்க கிராமச் சபைகள் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்டபடியான கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13(1) ம் பிரிவால் எனக்கு உரித்தாக்கப்பட்ட அதிகார பலத்தைக் கொண்டு திருக்கோணமலை மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தருமலிங்கம் வாமதேவன் ஆகிய நான் திருக்கோணமலை மாவட்டத்து சேருவில கிராமச் சபையின் 2 ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. இரத்தினுயக்க முதியான்சலாகே வில்லியம் சிங்கோ, அவருடைய தெரிவின் பின்னர், சபைக்கு அறிவிக்காமல் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்கட்குச் செல்லவில்லை என்பதை நிச்சயமாக அறிந்து திருக்கோணமலை மாவட்டத்து சேருவில கிராமச் சபையின் 2 ம் இலக்க வட்டார அங்கத்தவர் திரு. இரத்தினுயக்க முதியான்சலாகே வில்லியம் சிங்கோ இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதியிலிருந்து அங்கத்தவர் பதவியை விட்டு நீங்கியுள்ளார் என்று இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

*த. வாமதேவன்,*
*உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,*
*திருக்கோணமலை.*

*உள்ளூராட்சி அமைச்சு,*
*திருக்கோணமலை அலுவலகம்,*
*திருக்கோணமலை, 20.8.1970.*

*9-278—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922*

---

# பதவிகள் — வெற்றிடம்

## ''இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை'' யின் IV ஆம் பகுதியில் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்

*படிகள்.—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதிதங்களுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.*

*2. சேவை நிபந்தனைகள்.—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச் சேவை அதிகாரச் சட்டத்திற்கும். உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் ஏதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.*

*3. நியமன விதிகள்.—(அ) 1952 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 8 ந் திகதி வெளியான 10,432 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையின் IV ம் பகுதியில் பிரசுரிக்கப்பட்ட அட்டவணையில் குறித்துச் சொல்லப்பட்ட பதவிகளும், அவற்றோடு காலத்திற்குக் காலம் சேர்க்கப்படும் பதவிகளும் உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திட்டத்திற்கு மாற்றப்படாத பெண்களல்லாதாரால் வகிக்கப்படும் பொழுது, 1962 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை இளைப்பாற்றுச் சம்பளத் திட்டப் பிரமாணங்களின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரியனவாகும்.*

*(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின்படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும்.*

*(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ், உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தார்களோ அந்த உள்ளூராட்சி தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.*

*(ஈ) உள்ளூராட்சிச் சேவை இளைபாற்றுச் சம்பளத்திட்டத்தின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குட்படாததாக அறிவிக்கப்பட்ட பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் அப்பதவிகளுக்கு நியமனஞ் செய்யப்படுபவர்கள், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின், 18 ம் பிரிவின் கீழ் தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை சகாய நிதிக்கு, தமது சம்பளத்தின் 5 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். அவர்கள் நியமிக்கப்படும் உள்ளூராட்சித் தாபனங்கள், அவர்கள் சார்பாக, அவர்களின் சம்பளத்தின் 7½ சத விகிதத்தை அந்நிதிக்குச் செலுத்தும்.*

*(உ) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளுக்கு நியமிக்கப்படும் பெண்களல்லாத ஏனையோர் யாவரும், 55 வயதுக்கு மேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படும் திகதிக்கு நேர்முந்திய திகதியில் அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்துக்குரிய பதவிகளில் இருந்தவர்களும் தவிர 1952 ம் ஆண்டு ஜூலை மாதம் 30 ந் திகதி வெளியான 10,329 ம் இலக்க அரசாங்க விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட, 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப் பிரமாணங்களின்படி ஸ்தாபிக்கப்பட்ட உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்கு கருதப்படும் தங்களது அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சித் தாபனம் கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.*

*(ஊ) நியமிக்கப்படுபவர்கள். குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.*

*(எ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப் படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள், இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேகதகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின், வைத்திய பரிசோதனையிற் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.*

*(ஏ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.*

*(ஐ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.*

*(ஒ) நியமிக்கப்படுபவர்கள் தீவின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.*

*4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி, சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளில்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.*

*(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைப்படுத்துவதற்கு ஏதுவாக, 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும், அமைத்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.*

*(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசிய மற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.*

*(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில், அவர்களின் நியமனம் உறுதிப்படுத்துகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட காலவரையறைக்குள், க. பா. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனப் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்.*

*(5) கல்வியும் ஏனைய தகைமைகளும்.—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்*

சார்த்தி சிங்களப் பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புபவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு.—(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப்பெறுவர்.

குறிப்பு.—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு.—(3) 4 (3) ஆம், 4 ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில், தமது வயதுகளிலிருந்து, கிரமமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அடுத்துக் குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித்தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள அனுமதிக்கப்படுவர்.

7. வயதுச்சலுகை.— இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தர பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் பொழுது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. வேண்டற்பால ஏனையவை.—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுறுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் மாநகரசபை ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள், அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பக்காரர் தெரிவு செய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா ? இல்லையா ? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும் போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாக வேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவார்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகலவகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரிசார்த்திகள் தாமாகவே வினைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறு விதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

### உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாகக் கவனிக்க.—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பக்காரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யு முன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்ளவேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பக்காரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் சாதனங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ். (2) குணச் சான்றிதழ். (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்ப தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பக்காரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாக கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

..............................(......) பதவிக்கான விண்ணப்பம்.

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி :————.
(ஆ) ........................பதவிக்கான விண்ணப்பம்

2. முழுப் பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) :————.
தேசிய இனம் :————.
(மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவுமூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் சார்பு எண்ணையும் திகதியையும் கூறுக).

(3) தபால் விலாசம் :————.
(விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

1. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியில் சரியான வயது :————.
————வருடங்கள்————மாதங்கள்————நாட்கள்.
(ஆ) பிறந்த திகதி :————வருடம் ————மாதம் ————திகதி

5. பிறந்த இடம்—
(அ) விண்ணப்பக்காரர் :————.
(ஆ) அவரது பிதா :————.
(இ) அவரது பிதாவழிப் பேரன் :————.
(ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் :————.
(விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா ? தனியாளரா ? தாரமிழந்தவரா ? அல்லது கைம்பெண்ணா ? :————.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் :————.

| பொதுக் கல்வி | | | உயர் தொழிற்/தொழில் நுட்பக் கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த தி.தி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட தி.தி |
| 1 .................... | ...... | ...... | 1 ........ | ...... | ...... |
| 2 .................... | ...... | ...... | 2 ........ | ...... | ...... |
| 3 .................... | ...... | ...... | 3 ........ | ...... | ...... |
| 4 .................... | ...... | ...... | 4 ........ | ...... | ...... |
| 5 .................... | ...... | ...... | 5 ........ | ...... | ...... |

8. கல்வித் தகைமைகளும் திகதியுடன் கடைசியாகச் சித்தியெய்திய பரீட்சையும் :————.

(அ) சிங்களம் :————.

(ஆ) ஆங்கிலம் :————.

(இ) தமிழ் :————.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில்நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக :————.

10. உயர்தொழில்/தொழில்நுட்ப/தொழில் அனுபவங்கள் :————.

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி/ வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்).

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக.) :————.

(ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ————.

(இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) :————.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :————.

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் :————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் :————.

(3) இளைப்பாற்றிச் சம்பளமுண்டா ? :————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப்பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விடுபட்ட திகதிகளும் :————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா :————.

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அநுபவம் இவை இரண்டும் உமக்குண்டா ? உண்டெனில் அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக.) :————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத்தீர்ப்பின் தன்மையையும் தருக :————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? :————.

16. வேறு ஏதும் விவரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) :————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளையே இணைத்தல் வேண்டும்). அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை :————.

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக்காணின், நெரிமுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச்செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :————.
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
தபால் பெட்டி 530,
கொழும்பு 1.

---

## உள்ளூராட்சிச் சேவை
## அமைப்புத் திட்ட உத்தியோகத்தர்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி முதலில் உடனடியாக கொழும்பு மாநகர சபையின் பொறியியலாளருடைய திணைக்களத்திற்கு நியமிக்கப்படுவார்.

2. வேதனம்.—இப்பதவிக்குரிய வேதன அளவுத்திட்டம் வருமாறு : வருடாந்தம் ரூ. 7,800—3 × 360—8,800/9,600—4 × 360—11 × 480—16,320. வருடாந்தம் ரூ. 9,600 பெறுமுன்னும், ரூ. 14,400 பெறுமுன்னும் வினைத்திறமைகாண் தடையுண்டு. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி அவருடைய அனுபவத்திற்கிணங்க உரியதொரு படியில் வைக்கப்படுவார்.

3. வேண்டிய தகைமைகள்.—(அ) வயது :—18.9.1970 ல் 50 வயதிற்கு மேற்படக்கூடாது.

(ஆ) விண்ணப்பதாரர்கள் இலண்டன் நகர அமைப்புத்திட்ட ஸ்தாபனத்தின் கூட்டுறுப்பினர்களாகவும், அமைப்புத் திட்டங்களைத் தயாரிப்பதில் அனுபவமும் உடையவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

(இ) கட்டிடக்கலை அல்லது விஞ்ஞானமானி (பொறி இயல்) அல்லது குடியியல் எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்புரிமை (ஏ. எம். ஐ. சி. ஈ) அல்லது மாநகரசபை எந்திரவியலாளர் நிறுவனத்தின் கூட்டுறுப்புரிமை (ஏ. எம். ஐ. மூன். ஏ.) என்பனவற்றிலொன்றுடைய பட்டதாரிகளிடமிருந்து வரும் விண்ணப்பங்களும் கருத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும். எவ்வாறுயினும் இலண்டன் நகர அமைப்புத் திட்ட ஸ்தாபனத்தின் கூட்டுறுப்புரிமை, நியமனத்தின் பின் 5 வருடங்களுக்குள் பெறப்பட வேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி இத்தகைமையைப் பெறும் வரையில் வருடாந்தம் ரூ. 9,960 பெறும் முனைக்கு அப்பாற் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்.

4. இவ்வர்த்தமானியின் IV ம் பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப் பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டமாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு, 18.9.1970 ந் திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

6. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபைச் செயலாளருக்கு முகவரி இடப்பட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக் கூடாது.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி தனிப்பட்ட முறையில் தொழில் செய்வதிலிருந்து தவிர்க்கப்படுவார். அத்துடன் கொழும்பு மாநகர எல்லைக்குள் வசிக்கும்படி கேட்கப்படுவார்.

8. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலை பார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, அப்பகுதித் தலைவர் அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. எந்தவிதமாக ஆதரவு தேடுதல் பரீட்சார்த்திகளைத் தகைமையற்றவர்களாக்கிவிடும்.

10. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம், விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமைபற்றி அறிவிக்கப்படும்.

டி. விஜேசிங்க,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

த. பெ. 530, கொழும்பு 1
29.8.1970.

9-295—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

# துணை விதிகள்

## பெந்தோட்டைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் பெந்தோட்டைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவின் கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவபலங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பீ. சிறிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 12.8.1970.

#### துணைவிதி

1966 சனவரி 12 ந் திகதிய 14,634 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்டு காலத்துக்குக் காலந் திருத்தப்பட்ட அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்கள் சம்பந்தமான பெந்தோட்டைப் பட்டின சபைத் துணைவிதிகள், அவற்றின் இறுதியில் பின்வருவனவற்றைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :—

தோல்பதனிடுதல்

ஐம்பது கலன்களுக்குக் கூடுதலான மண்ணெண்ணெய் சேகரித்துவைத்தல்

பெற்றோல் சேகரித்துவைத்தல்

வானொலிப்பெட்டிகள் திருத்துதல்

9-286—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

## அகலவத்தைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் அகலவத்தைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

பீ. சிறிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 12 ந் உ.

### துணைவிதிகள்

#### மலமகற்றல்

1. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் XIXம் பாகத்தின் 6 ம் துணைவிதியின் நோக்கங்களுக்கு மாதாந்தம் சபைக்குச் செலுத்தப்படவேண்டிய மலகூடக் கட்டணம் மலமகற்றப்பட்ட வாளி ஒவ்வொன்றுக்கும் இரண்டு ரூபா என்ற விகிதப்படியிருத்தல் வேண்டும்.

2. துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கட்டணங்கள், அத்தகைய கட்டணம் செலுத்தப்பட வேண்டிய மாதத்தை அடுத்து வரும் மாதத்தின் பத்தாம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படல் வேண்டும்.

#### கஞ்சலகற்றல்

3. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் 20 ம பாகத்தின் 4 ம் துணைவிதியின் நோக்கங்களுக்குச் சபைக்கு மாதாந்தம் செலுத்தப்படவேண்டிய கஞ்சலகற்றலுக்கான கட்டணம், கஞ்சலகற்றல் சேவையினால் பயனடையும் எம்மனையகத்துக்கும் ஐம்பது சதம் (-/50) என்ற விகிதப்படியிருத்தல் வேண்டும்.

4. இத்துணைவிதியில் குறிப்பிடப்பட்ட கட்டணம்,, அத்தகைய கட்டணம் செலுத்தப்பட வேண்டிய மாதத்தை அடுத்துவரும் மாதத்தின் பத்தாம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ செலுத்தப்படுதல் வேண்டும்.

5. அகலவத்தைப் பட்டின சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் நியமத்துணைவிதிகளின் 15 ஆம் பாகத்தின் 1 ம் துணைவிதியின் நோக்கங்களுக்கு " சந்தைப் பிரதேசம் " என்பது அகலவத்தைப் பட்டின சபையின் நிர்வாக எல்லைகளுக்குள் இருக்கும் பிரதேசமாதல் வேண்டும்.

6. அகலவத்தைப் பட்டின சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நியமத்துணைவிதிகளின் 22 ஆம் பாகத்தின் 3 ஆம் துணைவிதியின் நோக்கங்களுக்கு வாகனங்களைப் பிரித்துக்காட்டும் எழுத்துக்கள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :—

| | |
|---|---|
| ஒரு மோட்டார்கார், மோட்டார் திரிக்கார், மோட்டார் லொறி, மோட்டார் பைசிக்கிள் வண்டில், கை வண்டில், றிக்ஷோ, பைசிக்கிள் அல்லது திரிசைக்கிள் தவிர்ந்த வேறு வாகனம் ஒவ்வொன்றுக்கும் .. .. .. | අ.ස.වා. |
| பைசிக்கிள் அல்லது திரிசைக்கிள் அல்லது பைசிக்கிள் கார் அல்லது வண்டில் அல்லது திரிசைக்கிள் கார் அல்லது வண்டில் ஒவ்வொன்றுக்கும் .. | අ.ස.වෙ.බ. |
| (அ) தொழில் நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படின் .. .. .. | අ.ස.ත.බ. |
| (ஆ) தொழில் அல்லாத வேறு நோக்கங்களுக்காக உபயோகிக்கப்படின் .. .. | අ.ස.බ.ක. |
| இரட்டை மாட்டு வண்டில் அல்லது பயணவண்டில் ஒவ்வொன்றுக்கும் .. .. | අ.ස.බ.බා. |
| ஒற்றைமாட்டு வண்டில் அல்லது பயணவண்டில் ஒவ்வொன்றுக்கும் .. .. | අ.ස.අ.ක. |
| கைவண்டில் ஒவ்வொன்றுக்கும் .. .. | අ.ස.අ.ක. |

9-288—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

## கிராமச் சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ம் அத்தியாயமான) கிராமச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 42 ஆவது பிரிவின் கீழ் கண்டி மாவட்டத்திலுள்ள அம்பகமுவை வடக்குக் கிராமப் பிரதேசத்துக் கிராமச் சபையால் ஆக்கப்பட்டு அப்பிரிவின் (3) ஆவது உட்பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக்கொண்டு அரசாங்க நிர்வாக, உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.

பி. சிரிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாக,
உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் 12 ந் உ.

### துணைவிதி

வாகனங்கள், மிருகங்கள் ஆகியவை மீதான வரிசம்பந்தமாகக் கிராமச் சபையினால் ஏற்றுகொள்ளப்பட்ட நியமத்துணைவிதிகளின் நோக்கத்துக்காக, வாகனங்களுக்கான வேறுபடுத்திக்காட்டும் எழுத்துக்கள் பின்வருவனவாதல் வேண்டும் :—

1. வண்டி, கரத்தை அல்லது றிக்ஷோ தவிர்ந்த வேறு எவ்விதமான வாகனமொவ்வொன்றுக்கும் .. .. .. ஏ.உ.ம.வா.
2. இரட்டைமாட்டு வண்டியொன்றுக்கு .. ஏ.உ.ம.இ.க.
3. ஒற்றைமாட்டு வண்டியொன்றுக்கு .. ஏ.உ.ம.இ.ஒ.
4. கைக்கரத்தை அல்லது றிக்ஷோ ஒன்றுக்கு .. ஏ.உ.ம.ஏ.க.
5. சைக்கிள் ஒன்றுக்கு .. .. ஏ.உ.ம.இ.

9-287—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922.

---

## பண்டாரகமைப் பட்டின சபை
## பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் பண்டாரகமைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ஆவது பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பலத்தைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்.

பி. சிரிவர்த்தன,
நிரந்தரச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு, 12 யூலை, 1970.

### துணைவிதிகள்

1. பின்வரும் தொழில்கள் அபாயகரமான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும் :—

கொப்பரு உற்பத்தி செய்தல்
(பத்து அந்தருக்கதிகமான) கொப்பரு சேகரித்து வைத்திருத்தல்.
எந்திரத்தினால் தேங்காயெண்ணெய் உற்பத்தி செய்தல்
(50 கலனுக்கதிகமாக) தேங்காயெண்ணெய் சேகரித்து வைத்திருத்தல்
கப்புக்கல் அகழ்தல்
கிரவல்கள் அகழ்தல்
வைக்கோல் சேகரித்துவைத்திருத்தல்
காரீயம் பதப்படுத்தல் அல்லது சேகரித்து வைத்திருத்தல்.
விறகு சேகரித்து வைத்திருத்தல்
மண்ணெண்ணெய்க்குதம் அல்லது களஞ்சியமொன்று வைத்திருத்தல்
பெற்றோலியம் எண்ணெய் அல்லது டீசல் எண்ணெய்க்குதம் அல்லது களஞ்சியம்மொன்று வைத்திருத்தல்
அச்சகமொன்றுவைத்திருத்தல்
ஆபரணங்கள் உற்பத்தி செய்தல்
அரிசி ஆலை அல்லது அரிசி குத்தும் எந்திரமொன்று வைத்திருத்தல்
தும்பு அல்லது தும்புப்பொருட்கள் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்திருத்தல்
கொல்லுலையொன்றுவைத்திருத்தல்
வெட்டுமரம் சேகரித்துவைத்திருத்தல்
வல்கனைஸ் செய்யும் இடமொன்று வைத்திருத்தல்
தகர வேலைக்கடையொன்றுவைத்திருத்தல்
சாக்குப்பைகள் சேகரித்துவைத்திருத்தல்
ரப்பர்த்தாள் அல்லது கிரேப் ரப்பர் உற்பத்தி செய்யும் இடமொன்றுவைத்திருத்தல்
ரப்பர்த் தாள் அல்லது ரப்பர் சேகரித்துவைத்தல்
நன்னிலைச் சேவையாற்றுவதற்கு அல்லது திருத்துவதற்கு வானொலிப்பெட்டி வேலைக்கூடமொன்றுவைத்திருத்தல்
ஒட்சிஜன் உபயோகிக்கப்படும் வேலைக்கூடமொன்றுவைத்திருத்தல்
(5 அந்தருக்கதிகமாக) இலவம் பஞ்சு சேகரித்துவைத்திருத்தல்
பீடி உற்பத்தி செய்யும் இடமொன்றுவைத்திருத்தல்
மோட்டார் வாகனங்கள் திருத்தும் இடமொன்றுவைத்திருத்தல்
பற்றிகளுக்கு மின்னூட்டும் இடமொன்று வைத்திருத்தல்
தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யும் இடமொன்று வைத்திருத்தல்
எந்திரத்தினால் கருங்கல் நொருக்கும் இடமொன்று வைத்திருத்தல்
தச்சுவேலைக்கூடமொன்று வைத்திருத்தல்
(10 சிப்பங்களுக்கதிகமாக) புகையிலை சேகரித்து வைத்திருத்தல்
ஒளிப்படைக்கலைக்கூடமொன்று வைத்திருத்தல்
எந்திரத்தினால் மரமரியும் இடமொன்றுவைத்திருத்தல்
கைத்தறியினால் அல்லது மின்தறியினால் புடவை நெசவு செய்யும் இடமொன்றுவைத்திருத்தல்

2. பின்வரும் தொழில்கள் அருவருப்பான தொழில்களாகக் கருதப்படுதல் வேண்டும் :—

(10 அந்தருக்கதிகமாக) கலப்புரத்தை அல்லது செயற்கை உரத்தை சேகரித்து வைத்திருத்தல்
வினாகிரி உற்பத்தி செய்தல்
சவர்க்காரம் உற்பத்தி செய்தல்
இரத்தம் அல்லது கழிவிறைச்சி அவித்தல்
தோல்கள் சேகரித்துவைத்திருத்தல்
மீனுக்குப் பனிக்கட்டியிடல்
பலகைகள் பாடம் பண்ணல்
பைசிக்கிள் திருத்தும் இடமொன்று வைத்திருத்தல்
எந்திரத்தினால் மிளகாய் அல்லது வாசனைச் சரக்குகள் அரைக்கும் இடமொன்று வைத்திருத்தல்
(5 அந்தருக்கதிகமாக) கருவாடு சேகரித்துவைத்திருத்தல்

3. பின்வரும் தொழில்கள் அபாயகரமானவையும் அருவருப்பானவையுமான தொழில்களாகக் கருதப்படல் வேண்டும் :—

25 அந்தருக்கதிகமாக சீமெந்து சேகரித்துவைத்திருத்தல்
தும்புக்குச் சாயமூட்டல்
செங்கற்கள் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்து வைத்திருத்தல்
ஓடுகள் உற்பத்தி செய்தல் அல்லது சேகரித்துவைத்திருத்தல்
சுண்ணும்பு சுடுதல், சேகரித்துவைத்திருத்தல், பதப்படுத்தல் அல்லது தகர்த்தல்.

9-284—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

### தொடந்துவைப் பட்டின சபை

### பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

*(256 ஆம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 152, 156 ஆகிய பிரிவுகளின் கீழ் தொடந்துவைப் பட்டின சபையால் ஆக்கப்பட்டு அக்கட்டளைச் சட்டத்தின் 153 ம் பிரிவினால் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட துணைவிதி.*

*பி. சிரிவர்த்தன,*
*நிரந்தரச் செயலாளர்,*
*அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,*
*உள்நாட்டலுவல்கள் அமைச்சு.*

*கொழும்பு, 12 ஓகஸ்டு, 1970.*

#### துணைவிதி

*1966 திசெம்பர் 16 ந் திகதிய 14,726 ஆம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட துணைவிதிகள் அவற்றின் 1 ம் துணைவிதியில் "தொடந்துவைப் பொதுச் சந்தையிலிருந்து 550 யார் ஆரையைக் கொண்ட ஒரு வட்டத்துக்குள் உள்ள பிரதேசமாக இருத்தல் வேண்டும்" என்னும் வாக்கியத்துக்குப் பதிலாக "தொடந்துவைப் பட்டின எல்லைகளினுள் அமைந்துள்ளதும் பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் இடப்பட்டு 1952 ஓகஸ்ற் 29 ந் தேதிய 10,440 ம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட கட்டளைக்குள்ள முதலாம் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளதுமான பிரதேசமாக இருத்தல் வேண்டும்" என்னும் வாக்கியத்தைச் சேர்ப்பதன் மூலம் இதனால் திருத்தப்படுகின்றன.*

*9-285—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922*

---

## உள்ளூராட்சி அதிகார நிலையத் தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள்

### உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள் அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 36 ம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 19 ந் வ.

#### அட்டவணை

| வட்டார இலக்கம் | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | யாழ்ப்பாண மாவட்டம் |
| | வட்டுக்கோட்டை கிராமச் சபை |
| 3 | சின்னத்தம்பி இலட்சுமணநாதன் |
| | அராலி கிராமச் சபை |
| 6 | இராமநாதர் கந்தமுத்து |
| | மன்னார் மாவட்டம் |
| | வங்காலை கிராமச் சபை |
| 7 | ஞானமுத்து மிராண்டா தொம்பிலிப்பு மிராண்டா |
| | பதுளை மாவட்டம் |
| | பட்டிப்பொல கிராமச் சபை |
| 7 | அத்தனயக்க முதியன்செலாகே ஜயவர்தன |
| | இரத்தினபுரி மாவட்டம் |
| | பலாங்கொடை நகர சபை |
| 1 | பன்னே கும்புரே வடுஹாகே சிமியன் |

9-277—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

---

### உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 262)

கீழேயுள்ள அட்டவணையில் பெயர்கள் காணப்படும் அபேட்சகர்கள் அவர்களின் பெயர்களுக்கு நேரே குறிக்கப்பட்டுள்ள உள்ளூரதிகார சபைகளது வட்டாரங்களின் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்களென (262 ம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தற் கட்டளைச் சட்டத்தின் 66 (2) ம் பிரிவின்கீழ் இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஈ. எப். டயஸ் அபேசிங்க,
தேர்தல் அதிகாரி,
(உள்ளூர்ச் சபைகள்).

கொழும்பு,
1970 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 21 ந் வ.

#### அட்டவணை

| வட்டார இலக்கம் | அபேட்சகரின் பெயர் |
|---|---|
| | மாத்தளை மாவட்டம் |
| | உடுகொடை உடசியபத்து மேற்கு கிராமச்சபை |
| 10 | டாவித் சிகுரோ மஹரகொடயலாகெதர |
| | வகபனாகா உடசியபத்து கிராமச் சபை |
| 5 | கோரத் முதியன்செலா உடகெதர உக்கு பண்டா |
| | அம்பாந்தொட்டை மாவட்டம் |
| | கிரம கிராமச் சபை |
| 3 | விஜமுனிகே ஜேம்ஸ் |
| | இரத்தினபுரி மாவட்டம் |
| | குருவிட்டி கோறளை மெதபத்து கிராமச் சபை |
| 7 | ராஜாகே பீற்றர் ஜயசிங்க |

9-276—4.9.70 ந் திகதிய வர்த்தமானி இல. 14,922

அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

1.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# இலங்கை அரசாங்க வர்த்தமானி (கெசற்)

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகள், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் மு. ப. 9 மணி முதல பி. ப. 1 மணி வரையும், மற்றும் நாட்களில் மு.ப. 9 மணி முதல் பி.ப. 4.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. போயா தினத்திற்கு முந்திய நாட்களில் நண்பகல் 12 மணிக்கும், மற்றும் நாட்களில் பி.ப. 3.30 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகனின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம்பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் “ சுப்பிறீம் கோட் புறொக்ராஸ் ” கையொப்ப மிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | ரு. ச. |
|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. .. .. | 20 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி .. .. | 20 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. .. .. | 220 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் .. .. | 440 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கை அரசாங்க வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப் பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகன், அரசாங்க அச்சகம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும், விளம்பரங்களும் வந்து சேரவேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.69 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| அரசாங்க வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் | | வெளியூர் |
|---|---|---|---|
| | ரு. ச. | | ரு. ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 0 | .. | 60 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 0 | .. | 42 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 50 | .. | 51 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|
| | ரு. ச. | | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திறகுள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 50 | .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 0 | .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 30 | .. | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத் திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 60 | .. | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறைநாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதிநாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கவிரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்படவேண்டும். அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.

### அட்டவணை— 1970

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஓகத்து | 7. 8.70 | வெள்ளி | 30. 7.70 | வியாழன் | பி.ப. 3.30 |
| | 14. 8.70 | வெள்ளி | 7. 8.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 21. 8.70 | வெள்ளி | 14. 8.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 28. 8.70 | வெள்ளி | 21. 8.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| செத்தெம்பர் | 4. 9.70 | வெள்ளி | 28. 8.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 11. 9.70 | வெள்ளி | 4. 9.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 18. 9.70 | வெள்ளி | 11. 9.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 25. 9.70 | வெள்ளி | 18. 9.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| ஒற்றோபர் | 2.10.70 | வெள்ளி | 25. 9.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 9.10.70 | வெள்ளி | 2.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 16.10.70 | வெள்ளி | 9.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 23.10.70 | வெள்ளி | 16.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 30.10.70 | வெள்ளி | 23.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| நவெம்பர் | 5.11.70 | வியாழன் | 30.10.70 | வெள்ளி | பி.ப. 3.30 |
| | 12.11.70 | வியாழன் | 5.11.70 | வியாழன் | ந.ப. 12.00 |
| | 20.11.70 | வெள்ளி | 12.11.70 | வியாழன் | ந.ப. 12.00 |
| | 27.11.70 | வெள்ளி | 20.11.70 | வெள்ளி | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 4.12.70 | வெள்ளி | 27.11.70 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 11.12.70 | வெள்ளி | 4.12.70 | வெள்ளி | ந.ப. 12.00 |
| | 18.12.70 | வெள்ளி | 10.12.70 | வியாழன் | பி.ப. 3.30 |
| | 24.12.70 | வியாழன் | 17.12.70 | வியாழன் | பி.ப. 3.30 |
| | 31.12.70 | வியாழன் | 24.12.70 | வியாழன் | பி.ப. 3.30 |

அரசாங்க அழுத்தகர் திணைக்களம்,
கொழும்பு,
1970 ஆம் ஆண்டு மார்ச்சு மீ 5 ஆந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இலங்கை அரசாங்க அழுத்தகர் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.